1989 மே 2]

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒருமணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை (3—5—1989) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3-5-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. சேலம் மாவட்டம் சார்ந்த மணிவிழுந்தான் காலனி வசந்தாபுரம் கிராமங்களை தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் 11—11—1988 ஆம் நாளிட்ட 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1958] 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

114. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—8—1987 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].